வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகளுக்கு நற்சான்றிதழ்

வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானி, திட்ட ஒருங்கிணைப்பாளர் ராதாகிருஷ்ணனுக்கு நற்சான்றிதழ் வழங்குகிறார் ஆட்சியர் காயத்ரி கிருஷ்ணன்.

நீடாமங்கலம், ஆக. 16: நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள், திட்ட ஒருங்கிணைப்பாளர் ராதாகிருஷ்ணன் மற்றும் கமலசுந்தரி ஆகியோருக்கு திருவாரூர் மாவட்ட ஆட்சியர் காயத்ரி கிருஷ்ணன் திங்கள்கிழமை நற்சான்றிதழ் வழங்கினார்.

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் நலனுக்காக தொழில்நுட்பங்களை எடுத்துரைத்தும், சுய தொழில் தொடங்க உறுதுணையாக இருந்தமைக்கும், கள பிரச்னைகளை ஆய்வுசெய்து, அதற்கான தீர்வுகளை வழங்கியும், களப்பயிற்சி, உள் வளாக பயிற்சி, புதிய தொழில் நுட்பங்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான திட்டங்களை விவசாயிகளுக்கு மாவட்டம் முழுவதும் பரவலாக்கம் செய்ததற்காக இந்த நற்சான்றிதழ் வழங்கப்பட்டது.

நன்னிலம் ஆகாசகாளியம்மன் கோயில் ஆடி மாதத் திருவிழா

நன்னிலம், ஆக. 16: நன்னிலம் அருகேயுள்ள நல்லமாங்குடி ரஸ்தாத் தெருவில் ஆகாசகாளியம்மன் கோயில் உள்ளது.

நன்னிலம் நல்லமாங்குடி ஆகாசகாளியம்மன்.

இக்கோயிலில் ஆடி மாத கடைசி செவ்வாய்க் கிழமையை முன்னிட்டு காலையில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் நல்லமாங்குடி மாரியம்மன் கோயிலில் இருந்து பால்குடம் எடுத்துவந்து தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தினர்.

பாலாபிஷேகத்துக்குப் பிறகு, சிறப்பு அலங்காரத்தில் ஆகாசகாளியம்மனுக்கு மகாதீபாராதனை நடைபெற்று, பக்தர்களுக்கு விபூதி பிரசாதமும், அன்னதானமும் வழங்கப்பட்டது. செவ்வாய்க்கிழமை இரவு மின் அலங்கார சப்பரத்தில் ஆகாசகாளியம்மன் வீதி உலா நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை நல்லமாங்குடி மற்றும் சிகார்பாளையம் கிராம மக்கள், கோயில் அர்ச்சகர் எஸ். ஜெகநாதன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

சுதந்திர தினத்தில் மது விற்பனை: 4 பேர் கைது

மன்னார்குடி , ஆக. 16: மன்னார்குடியில் சுதந்திர தின விடுமுறை நாளில் மதுவிற்ற 4 பேர் திங்கள்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

மன்னார்குடி காவல் ஆய்வாளர் விஸ்வநாதன் தலைமையில் போலீஸார் டாஸ்மாக் கடைகள் மற்றும் மது அருந்தும் கூடங்களில் திங்கள்கிழமை திடீர் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, மேல ராஜவீதி, பந்தலடி கீழ்புறம், ருக்மணி பாளையம் ஆகிய பகுதியில் பூட்டியிருந்த டாஸ்மாக் கடை அருகே அனுமதியின்றி மதுபாட்டில்கள் விற்றுகொண்டிருந்த பைங்கா நாடு முருகானந்தம் (42), நெம்மேலி கலைவாணன் (57), கெழுவத்தூர் தமிழரசன் (55) , வாஞ்சூர் அரவிந்த் (29) ஆகிய 4 பேரை போலீஸார் கைதுசெய்தனர். அவர்களிடமிருந்து 350 மதுபாட்டில்கள், ரூ. 13,500 ரொக்கத்தை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

மன்னார்குடியில் புத்தகத் திருவிழா நாளை தொடக்கம்

மன்னார்குடி, ஆக. 16: மன்னார்குடியில் புத்தகத் திருவிழா வியாழக்கிழமை (ஆக.18) தொடங்கி, 11 நாள்கள் நடைபெறுகிறது.

மன்னார்குடி மிட்டவுன் ரோட்டரி சங்கம், தமிழ்நாடு அறிவியல் இயக்கம் இணைந்து 2 ஆவது ஆண்டாக நடத்தும் புத்தகத் திருவிழா, மன்னார்குடி காந்திசாலையில் உள்ள தேசிய மேல்நிலைப் பள்ளியில் ஆக. 18 தொடங்கி, 28 ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும் தொடக்க விழா நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஆட்சியர் ப. காயத்ரி கிருஷ்ணன் தலைமைவகிக்கிறார். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் து.பெ. சுரேஷ் குமார் முன்னிலை வகிக்கிறார். தமிழக அரசின் மாநில திட்டக் குழு துணைத் தலைவர் ஜெ. ஜெயரஞ்சன் புத்தகத் திருவிழாவை தொடங்கிவைக்கிறார். மன்னார்குடி எம்எல்ஏ டி.ஆர்.பி. ராஜா முதல் விற்பனையை தொடங்கி வைக்கிறார்.

இதில், ஒவ்வொரு நாளும் ஒரு சிறப்பு அழைப்பாளர் பங்கேற்று சிறப்புரை ஆற்றுகின்றனர். அந்த வகையில், பொதுப்பள்ளிக்கான

மாநில மேடை பொதுச் செயலர் பு.பா. பிரின்ஸ் கஜேந்திர பாபு, பேராசிரியர் இரா. காமராசு, பேச்சாளர் இ.சா. பர்வீன் சுல்தானா, திரைப்பட வசனகர்த்தா பாஸ்கர் சக்தி, சூழலியல் எழுத்தாளர் நக்கீரன், சித்த மருத்துவர் கு. சிவராமன், முன்னாள் அமைச்சர்கள் ஆர். காமராஜ், வைகைச்செல்வன், பேச்சாளர் மதுக்கூர் ராமலிங்கம், குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், ஜெய்பீம் திரைப்பட இயக்குநர் த.செ. ஞானவேல், பாடலாசிரியர் அறிவு, அறிவியல் இயக்க மாநிலத் தலைவர் எஸ். தினகரன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

விழாவையொட்டி, கவியரங்கம், வழக்காடு மன்றம், கலைநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. புத்தகத் திருவிழா, நாள்தோறும் காலை 10 மணிக்கு தொடங்கி, இரவு 10 மணிக்கு நிறைவு பெறுகிறது. மொத்தம் 45 அரங்கள் அமைக்கப்படவுள்ளன.

தொழில்கடன் பெற சிறப்பு முகாமில் பங்கேற்கலாம்: ஆட்சியர்

திருவாரூர், ஆக. 16: தஞ்சையில் புதன்கிழமை (ஆக. 17) முதல் நடைபெறும்தொழில்கடன் முகாமில் பங்கேற்று பயன்பெறலாம் என திருவாரூர் மாவட்ட ஆட்சியர் ப. காயத்ரி கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், மாநில அளவில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு நிதிக் கழகம் ஆகும். 1949 இல் தொடங்கப்பட்ட இக்கழகம், மாநில அரசின் ஆதரவுடன் இதுவரை எண்ணற்ற தொழிற்சாலைகளுக்கு கடனுதவி வழங்கி, தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.

இக்கழகம் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் பிரிவுகளுக்கு புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், தற்போது இயங்கிவரும் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்கும், உற்பத்தியைப் பன்முகப்படுத்துவதற்கும் பல்வேறு சிறப்புத் திட்டங்களின் கீழ் கடனுதவி வழங்கிவருகிறது.

தஞ்சாவூர் கிளை அலுவலகத்தில்(எண்2854,என்ஜிகேஅபார்ட்மெண்ட், நாஞ்சிக்கோட்டை ரோடு, பழைய அருள் தியேட்டர் எதிரில், தஞ்சாவூர் - 613001) குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கான சிறப்பு தொழில்கடன் முகாம் ஆக. 17 முதல் செப். 2 வரை நடைபெற உள்ளது.

இந்த சிறப்பு தொழில்கடன் முகாமில், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் பல்வேறு திட்டங்களின் சிறப்பு அம்சங்கள், மத்திய, மாநில அரசுகளின் மானியங்கள் (மூலதன மானியம் மற்றும் இதர மானியங்கள்) புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் போன்றவை குறித்த விரிவான விளக்கங்கள் தரப்படுகிறது. தகுதிபெறும் தொழில்களுக்கு தமிழக அரசின் 25 சதவீத முதலீட்டு மானியம் ரூ. 1.50 கோடி வரை வழங்கப்படும்.

முகாமில் சமர்ப்பிக்கப்படும் பொதுக் கடன் விண்ணப்பங்களுக்கு ஆய்வுக் கட்டணத்தில் 50 விழுக்காடு சலுகை அளிக்கப்படும். இந்த வாய்ப்பை புதிய தொழில்முனைவோர், தொழில திபர்கள் பயன்படுத்தி, தொழில் திட்டங்களுடன் வந்து தொழில்கடன் மற்றும் மத்திய, மாநில அரசுகளின் மானிய சேவைகளை பயன்படுத்திக்கொள்ளலாம். மேலும் தகவலுக்கு 04362-274230, 230465, 94425 40854, 73734 94331 என்ற தொலைபேசி, கைப்பேசி எண்களுக்கு தொடர்புகொள்ளலாம்.

மாநில கபடி போட்டிக்கு மாவட்ட அணி வீரர்கள் தேர்வு

மன்னார்குடி, ஆக. 16: மாநில அளவிலான இளையோர் கபடிப் போட்டிக்கு திருவாரூர் மாவட்ட அணி வீரர்கள் தேர்வு மன்னார்குடி அருகே திங்கள்கிழமை நடைபெற்றது.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி விவேகானந்தா மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி விளையாட்டரங்கில், ஆக. 19 முதல் 21 ஆம் தேதி வரை நடைபெற உள்ள 48 ஆவது தமிழ்நாடு மாநில இளையோர் கபடி சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க உள்ள திருவாரூர் மாவட்ட இளையோர் கபடி அணி வீரர்கள் தேர்வு மன்னார்குடியை அடுத்த வடுவூர் விளையாட்டு அகாதெமி உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. மாவட்டம் முழுவதும் இருந்து 75 வீரர்கள் பங்கேற்றனர். இவர்களுக்கு, பல்வேறு தகுதிச் சுற்று போட்டிகள் நடத்தப்பட்டு, தேர்வுக் குழு உறுப்பினர்கள் வேலுமணி, தண்டாயுதபாணி, சேது மாதவன் ஆகியோர் திருவாரூர் மாவட்ட இளையோர் கபடி வீரர்களை தேர்வு செய்தனர்.

மாவட்ட அமெச்சூர் கபடி கழகச் செயலாளர் ராச. ராசேந்திரன், காவல் துறை முன்னாள் துணைக் கண்காணிப்பாளர் கணேசமூர்த்தி, வடுவூர் விளையாட்டு அகாதெமி செயலர் என். சாமிநாதன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

முன்னதாக, மாவட்ட கபடி கழக துணைத் தலைவர் பொன். கோவிந்த ராஜன் வரவேற்றார். சேகர் நன்றி கூறினார்.

மாநிலப் போட்டிக்கு தேர்வான மாவட்ட அணி வீரர்களுடன் கபடி கழகத்தினர்.

அதிமுக ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டம்

ஒன்றிய செயல்வீரர்கள் கூட்டத்தில் பேசுகிறார் கட்சியின் மாவட்டச் செயலாளர் ஆர். காமராஜ்.

மன்னார்குடி, ஆக. 16: மன்னார்குடி அதிமுக மேற்கு மற்றும் கிழக்கு ஒன்றியங்களைச் சேர்ந்த கட்சி செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம், மேற்கு ஒன்றிய அவைத் தலைவர் சிவ. மதியழகன் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முன்னாள் எம்பி கே. கோபால், கட்சியின் அமைப்புச் செயலர் சிவா. ராஜமாணிக்கம் முன்னிலை வகித்தனர். முன்னாள் அமைச்சரும், அதிமுக மாவட்டச் செயலருமான ஆர். காமராஜ் எம்எல்ஏ சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றார். இதில், ஜெயலலிதா பேரவை மாவட்டச் செயலர் பொன். வாசுகிராம், கட்சி பொதுக்குழு உறுப்பினர் ஆர். எஸ். கலைவாணன், மாவட்ட மகளிரணி செயலர் டி. சுதா, ஒன்றியக் குழுத் தலைவர் டி. மனோகரன், மாவட்ட துணைச் செயலர் த. உதயகுமாரி, நகரச் செயலர் ஆர்.ஜி. குமார், மேற்கு ஒன்றிய பொருளாளர் ஜி. ஜெயக்குமார், அண்ணா தொழிற்சங்க மாவட்டத் தலைவர் பி. வீரமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: தமிழகத்தில் சமூக விரோதச் செயல்கள் மற்றும் கஞ்சா விற்பனை அதிகரித்து வருவதை தடுக்கத் தவறிய திமுக ஆட்சியை கண்டிப்பது. சாதாரண மற்றும் ஏழை, எளிய மக்களை பாதிக்கும் வகையில் சொத்துவரி, வீட்டு வரி, உயர்த்தப்பட்ட பால், மின் கட்டணம் ஆகியவற்றை உடனடியாக ரத்துசெய்ய வேண்டும். அதிமுக ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட தாலிக்கு தங்கம், திருமண நிதியுதவி, அம்மா மினி கிளினிக் போன்ற ரத்துசெய்யப்பட்ட திட்டங்களை மீண்டும் தொடங்கவேண்டும். ஆன்லைன் சூதாட்டத்தை தடைசெய்யாமல், மக்கள் கருத்து கேட்கும் கூட்டம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதற்கு கண்டனம் தெரிவிப்பது.

முன்னதாக, அதிமுக கிழக்கு ஒன்றியச் செயலர் தங்க. தமிழ்கண்ணன் வரவேற்றார். நிறைவாக மேற்கு ஒன்றியச் செயலர் கா. தமிழ்ச்செல்வம் நன்றி கூறினார்.

வடுவூரில் சுதந்திரம் குறித்த நூல் வெளியீடு

நீடாமங்கலம், ஆக. 16: நீடாமங்கலம் ஒன்றியம், வடுவூர் சத்திய ஞான சபையில் நாட்டின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, சுதந்திர போராட்ட தலங்களின் தரிசனம் என்ற நூல் வெளியிடப்பட்டது.

திருவாரூர் மாவட்டம் தர்ம ரக்ஷண சமிதி சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், அமைப்பின் தலைவர் ரா. பாலசுப்ரமணியம் நூலை வெளியிட, திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் ஆட்சிப் பேரவைக் குழு உறுப்பினர் ரேணுகா பெற்றுக்கொண்டார்.

இதுகுறித்து நூலாசிரியர் ஆதலையூர் சூரியகுமார் கூறியது: இந்தியாவின் விடுதலை போராட்டம் என்பது நீண்ட நெடிய வரலாறு கொண்டது. இந்தியாவின் பல்வேறு இடங்களில் பல்வேறு விதமான போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற இடங்களின் வரலாற்றைக் கூறும் நூல் இது.

சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற இடங்கள் வழிபாட்டுத் தலங்கள் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதைக் குறிக்கும் வகையில், இந்த நூல் சத்திய ஞான சபையில் வெளியிடப்படுகிறது என்றார்.

உஜ்வாலா யோஜனா திட்டத்தில் இலவச எரிவாயு பெறலாம்: ஆட்சியர்

திருவாரூர், ஆக. 16: திருவாரூர் மாவட்டத்தில் பிரதமரின் உஜ்வாலா யோஜனா திட்டத்தின்கீழ், இலவச எரிவாயு இணைப்பு பெற்று, கிராமப்புற, நகர்புற ஏழைப் பெண்கள் பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் ப. காயத்ரி கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திருவாரூர் மாவட்டத்தில், எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்கள் இத்திட்டத்தில் பயன்பெற மின்னணு குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வங்கிக் கணக்கு எண் விவரம் மற்றும் குடும்பத் தலைவியின் புகைப்படம் ஆகிய ஆவணங்களுடன் தங்களது குடியிருப்புக்கு அருகேயுள்ள ஐஓசிஎல், பிபிசி, எச்பிசி எரிவாயு வழங்கு நிறுவனங்களை அணுகி பயன்பெறலாம்.

இத்திட்டம் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எய்தும் வரை நடைமுறையில் இருக்கும். எனவே, எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்கள் விரைந்து பயன்பெறலாம்.

அரசுப் பள்ளியாக மாற்றக் கோரி கையெழுத்து இயக்கம்

திருவாரூர், ஆக. 16: திருவாரூரில் உள்ள வ.சோ. ஆண்கள் மேல்நிலைப் பள்ளியை அரசுப் பள்ளியாக மாற்றக் கோரி கையெழுத்து இயக்கம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

திருவாரூர் அருகே புலிவலம் ஊராட்சியில் நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம். செல்வராஜ், திருவாரூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் புலிவலம் ஏ. தேவா ஆகியோர் கையெழுத்து இயக்கத்தை தொடங்கிவைத்தனர்.

இதில், பள்ளி மீட்புக்குழுத் தலைவர் ஆரூர் சீனிவாசன், நகர்மன்ற உறுப்பினர் வரதராஜன், நுகர்வோர் மன்ற பொதுச் செயலாளர் ரமேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கிராமசபை கூட்டம்...

நீடாமங்கலம் ஒன்றியம், ஆதனூரில் ஊராட்சித் தலைவர் சந்திரா அன்பழகன் தலைமையில், திங்கள்கிழமை நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் பங்கேற்ற மாவட்ட உதவித் திட்ட அலுவலர் கீதா ரத்தினம், ஒன்றியக் குழுத் தலைவர் செந்தமிழ்செல்வன், வட்டார வளர்ச்சி அலுவலர் அன்பழகன் உள்ளிட்டோர்.

தமிழக வாழ்வுரிமை கட்சியினர் ஆர்ப்பாட்டம்

திருவாரூர், ஆக. 16: சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி இடஒதுக்கீடு வழங்கக் கோரி, திருவாரூரில் தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மத்திய, மாநில அரசுகள் சமூகநீதியை பாதுகாக்க, சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி, அனைத்து சாதியினருக்கும் அவரவர் மக்கள்தொகைக்கேற்ப கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்பதை வலியுறுத்தி, திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் சீனிசெல்வம் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், கொரடாச்சேரி ஒன்றிய அமைப்பாளர்கள் ராஜேஷ், கண்ணன், மோகன், ரஞ்சித் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

பள்ளி மாணவர்களுக்கு மென்திறன் பயிற்சி

மன்னார்குடி, ஆக. 16: மன்னார்குடி தேசிய மேல்நிலைப் பள்ளியில் ஜேசிஐ மன்னை மற்றும் மதுரை நிகில் அறக்கட்டளை சார்பில் மாணவர்களுக்கான மென்திறன் பயிற்சி வகுப்பு அண்மையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, ஜேசிஐ மன்னை தலைவர் முகமது பைசல் தலைமைவகித்தார். பள்ளித் தலைமை ஆசிரியர் த.லெ. ராதாகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். தாளாளர் எஸ். சேதுராமன் பயிற்சியை தொடங்கிவைத்தார்.

இதில், 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள 1,860 மாணவர்களுக்கு இலக்கு நிர்ணயித்தல், முடிவுகளை மேற்கொள்ளுதல், நினைவாற்றல் பயிற்சி, தொடர்பாற்றல், மனிதநேயம், அன்பு, கருணை ஆகிய தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

நிகில் அறக்கட்டளையின் தலைமைப் பயிற்றுநர் நாகலிங்கம் பேசுகையில், இன்றைய மாணவர்கள் வேலைவாய்ப்பை பெறுவதற்கு வகுப்பறை கல்வி மட்டும் போதாது. மாறாக, மென்திறன்களையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். பல்வேறு வாழ்வியல் திறன்களை வளர்த்துக் கொள்வதன் மூலம் மாணவர்கள் சிறந்த குடிமகன்களாக விளங்க முடியும். அறக்கட்டளை மூலம் இதுவரை 2.10 லட்சம் மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றார்.

ஜேசிஐ முன்னாள் மண்டலத் தலைவர் வி.எஸ். கோவிந்தராஜன், நிகில் அறக்கட்டளை நிர்வாகி சௌந்தர், எஸ்.எம்.ஏ மண்டலச் செயலாளர் டி. செல்வகுமார், மண்டல இயக்குநர் எஸ். கமலப்பன், முன்னாள் தலைவர் எஸ். அன்பரசு உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

தமிழ்நாடு அரசு
நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம்
திருவாரூர் மாவட்டம்.

சிறப்பு திட்டம் - ஆதிதிராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் 2021-22

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.2892/2021/அ2, நாள் : 12.08.2022

மின் ஒப்பந்தப்புள்ளி

1) முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை பார்வையிடவும்.

2) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவர்களால் சிறப்பு திட்டம் – ஆதிதிராவிடர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் 2021-22ஆம் ஆண்டு திட்டத்தின்கீழ் பெரம்பூர் ஊராட்சி ஆதிதிராவிடர் சுடுகாடு சாலையை மேம்பாடு செய்தல் பணிக்கு மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரு உறைகள்) மூலம் வரவேற்கப்படுகிறது.

3) சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் 12.08.2022 முதல் 25.08.2022 வரையிலான காலத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

1) மின் ஒப்பந்த ஆவணம் பதிவிறக்கம் மற்றும்
சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 25.08.2022 – 15.00 மணி

2) மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும்
நாள் மற்றும் நேரம் : 25.08.2022 – 16.00 மணி முதல்

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
நீடாமங்கலம் வட்டாரம், திருவாரூர் மாவட்டம்.

வெ.ஆ.எண். 57/விளம்பரம்/செம.தொ.அ/திருவாரூர், நாள் : 16.08.2022

ICICI ஹோம் :பைனான்ஸ் | பெருநிறுவன அலுவலகம் - ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்., ICICI HFC டவர், அந்தேரி - குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு) மும்பை 400 059 இந்தியா

கிளை அலுவலகம் : ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்., 2 வது தளம், எண். 75 D, லட்சுமி வேலட்ஸ், ப்ளாட் எண். A 8, சாலை சாலை, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி - 620 018

(பார்க்க - விதி 8 (6) க்கான விதி விலக்கு)

அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் கடன்தாரர் (கள்), ஜாமீன்தாரர் (கள்) மற்றும் பொது மக்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்ட / கடன் பொறுப்புக்கு உட்படுத்தப்பட்டு, ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட். - ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்ட அசையாச்சொத்துக்கள் 'இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்' மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் இதன் கீழ்க்குறிப்பிட்ட சுருக்கமான விவரங்களின் படி விற்பனை செய்யப்படும்.

வ. எண்	கடன்தார ர்(கள்) / சுவட்டு-கடன்தார ர்கள் / ஜாமீன்தாரர்களின் பெயர் / கடன் கணக்கு எண்.	அடமானச்சொத்து விபரங்கள் (தெரிந்த வில்லங்கங்களுடன்) (ஏதேனும் இருப்பின்)	நிலுவை தொகை (ரூபாயில்)	அடிப்படை விலை டேவணித் தொகை	சொத்து ஆய்வு தேதி & நேரம்	ஏல தேதி & நேரம்
(A)	(B)	(C)	(D)	(E)	(F)	(G)
1.	V முருகவேல் (கடன்தாரர்) கிருஷ்ணவேணி V (சுவட்டு கடன்தாரர்) கடன் கணக்கு எண். NHTNJ00000827740	கதவு எண். 14A, மன்னை நாராயணசாமி நகர், மன்னார்குடி தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் - 614 014	05 - ஆகஸ்ட் - 2022 ம் தேதியின் படி ரூ.27,44,639/-	ரூ. 24,52,500/- ரூ. 2,45,250/-	14 செப்டம்பர் - 2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை	20 செப்டம்பர் - 2022 பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை

ஆன்லைன் ஏலமானது, ஏல முகமை க்ளோபல் டெக்-ன் வலைதளம் (URL Link https://BestAuctionDeal.com)ல் நடைபெறும். மொத்த நிலுவைத்தொகைகளை மேற்கொண்டு வரும் வட்டியுடன் சேர்த்து 2022 செப்டம்பர் 19 ம் தேதி மாலை 05.00 மணிக்கு முன்பு வரை செலுத்த அடமானதாரர் / இவ்வறிவிப்பு வழங்கப்பெற்றவர் ஆகியோருக்கு கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது., தவறும் பட்சத்தில் இந்த ஜாமீன் சொத்துக்கள் பட்டியலிட்டவாறு விற்பனை செய்யப்படும்.

விலைகோர உத்தேசித்துள்ளோர் / வாங்குவோர், RTGS / கேட்பு வரைவோலையாக எடுக்கப்பட்ட மேற்சொன்ன டேவணித்தொகையுடன் (களம் "E" ல் குறிப்பிட்டவாறு) கூடிய விலைப்புள்ளிகளை ICICI ஹோம் :பைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்., 2 வது தளம், எண். 75 D, லட்சுமி வேலட்ஸ், ப்ளாட் எண். A □ 8, சாலை சாலை, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி - 620 018 ல் 2022 செப்டம்பர் 19 ம் தேதியன்று மாலை 04.00 மணிக்கு முன்பே, சமர்ப்பிக்க வேண்டும்.,

விருப்பமுள்ள ஏலதாரர் (கள்) தங்களது விலைப்புள்ளிகளை வலைதளம் மூலம் சமர்ப்பிக்க இயலவில்லையெனில், தமது கையொப்பமிட்ட விலைப்புள்ளி ஆவணங்களை ICICI ஹோம் :பைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்., 2 வது தளம், எண். 75 D, லட்சுமி வேலட்ஸ், ப்ளாட் எண். A - 8, சாலை சாலை, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி - 620 018 என்ற முகவரிக்கு 2022 செப்டம்பர் 19 ம் தேதியன்று மாலை 05.00 மணிக்கு முன்பே கிடைக்குமாறு அனுப்பலாம் என்பதை தயவு கூர்ந்து அறியவும். டேவணித்தொகையானது. கேட்பு வரைவோலையாக (DD) ஏதேனும் தேசியமயமாக்கப்பட்ட / பட்டியலிடப்பட்ட வங்கியில் "ICICI HOME FINANCE COMPANY LIMITED" என்ற பெயரில் திருச்சிராப்பள்ளியில் செலுத்தக்கவாறு எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேலும், சொத்து ஆய்வு, ஏலம் அல்லது விலைப்புள்ளி சமர்ப்பிப்பு தொடர்பாக ஏதேனும் விபரங்கள் தேவைப்படுமாயின், ICICI ஹோம் :பைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட் - ன் அலைபேசி எண்கள் - 70210 72869 அல்லது NexXen Solutions Private Limited - யை தொடர்பு கொள்ளலாம்.

அதிகாரப்பூர்வ அலுவலர், எந்த காரணமும் குறிப்பிடாமல் எந்த ஒரு அல்லது அனைத்து ஏலம் / விலைப்புள்ளியை தள்ளுபடி செய்யவோ, ஏற்றுக்கொள்ளவோ உண்டான உரிமையை தன்னகத்தே வைத்துள்ளார்.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வலைதளம் https://www.icicihfc.com/ யை தயவு கூர்ந்து பார்வையிடவும்.

தேதி : 2022 ஆகஸ்ட் 17
இடம் : திருவாரூர்

அதிகாரப்பூர்வ அலுவலர்
ICICI ஹோம் :பைனான்ஸ் கம்பெனி லிமிட்டெட்